# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.3/2026

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கண்ணன் | Father's Name | : | சம்மந்தம் |
| Village | : | கொத்தமங்கலம் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of April 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொத்தமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் லோடு மேன் வேலை பார்க்கிறேன். 30.09.2024 ம் தேதி மாலை 4.00 மணியளவில் நானும் விக்னேஷ்குமாரும் ராபர்ட் ப்ரைஸ் வீட்டருகே நின்று கொண்டிருந்தபோது 28.09.2024 ம் தேதி நடந்த சம்பவம் பற்றி நீடாமங்கலம் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் விக்னேஷ்குமார் முதல் சாட்சியாகவும் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.10 14:40:51 +0530

போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த அ.சா.ஆ.2 ல் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, நான் படித்துப் பார்க்கவில்லை, போலீசாரும் படித்து காண்பிக்கவில்லை. அந்த கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.10 14:40:56 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.3/2026

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விக்னேஷ்குமார் | Father's Name | : | பீட்டர் |
| Village | : | கொத்தமங்கலம் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 27 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of April 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொத்தமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் லோடு மேன் வேலை பார்க்கிறேன். 30.09.2024 ம் தேதி மாலை 4.00 மணியளவில் நானும் கண்ணனும் ராபர்ட் ப்ரைஸ் வீட்டருகே நின்று கொண்டிருந்தபோது 28.09.2024 ம் தேதி நடந்த சம்பவம் பற்றி நீடாமங்கலம் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் கண்ணன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம்.

SELVA MUTHU KUMARI — Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.10 14:41:03 +0530

அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த அ.சா.ஆ.2 ல் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, நான் படித்துப் பார்க்கவில்லை, போலீசாரும் படித்து காண்பிக்கவில்லை. அந்த கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.10 14:41:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE**

**TIRUVARUR**

**Sessions Case No.3/2026**

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர் கணேஷ்குமார் | Father's Name | : | கஜேந்திரன் |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of April 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நீடாமங்கலம் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட வினோத் சின்னப்பனை அவரது மனைவி ஆஷா அழைத்து வர 6 தெரிந்த நபர்கள் மரக் கட்டையினால் தலையில் தாக்கப்பட்டதாக கூறியதை தொடர்ந்து ஏற்பட்ட காயங்கள் குறித்து நீடாமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3**. கடந்த 08.09.2024 அன்று திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.10 14:41:12 +0530

மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியிலிருந்தபோது வினோத்சின்னப்பதாஸ், வயது 33, த/பெ.வின்செண்ட், மாதாகோவில் தெரு, நீடாமங்கலம் என்பவரை அவரது மனைவி ஆஷா என்பவர் அழைத்துவந்தார். அப்போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரிடம் விசாரத்தபோது தன்னை தெரிந்த 2 நபர்கள் மற்றும் 4 தெரியாத நபர்கள் மாலை 5.30 மணிக்கு அவருடைய தெருவில் கட்டை மற்றும் கத்தியால் தாக்கியதாக கூறினார். பின்தலையில் 4 செமீ அளவில் தையல்போட்ட காயம் மற்றும் வலது பக்கவாட்டு தலையில் 5 செமீ அளவில் தையல்போட்ட காயம் இருந்தது. மேலும் அவர் தலை, கழுத்து, வலது தொடை பகுதிகளில் வலியிருப்பதாக கூறினார். அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4.** அதற்கு xray பரிசோதனை செய்து அதில் எந்த பாதிப்பும் இல்லையென்று எலும்பு முறிவு மருத்துவர் சான்று வழங்கினார். மேலும் அவருக்கு தலைக்கு CT scan எடுத்து அதிலும் எந்த பாதிப்பும் இல்லையென்று தெரியவந்து. மேற்கொண்டு அவருக்கு சிகிச்சைகள் அளித்து 30.09.2024 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அன்றைய தினமே வினோத் சின்னப்பனின் மனைவி ஆஷா என்பவர் தன்னை தெரிந்த ஒரு நபர் கைகளால் அடித்ததாக தெரிவித்தார். அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவுமில்லை. அவரது இடுப்பு மற்றும் கழுத்து பகுதிகளில் Xray எடுக்கப்பட்டு எந்த பாதிப்புமில்லை என தெரிவித்தேன்.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.04.10 14:41:17 +0530

வினோத் சின்னப்பனுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய இறுதி கருத்துரையுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.5**. ஆஷா என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6.** நான் வழங்கிய இறுதி கருத்துரையுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7**. இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். கட்டையால் தாக்கப்பட்டால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**குறுக்கு விசாரணை**

வினோத் சின்னப்பனை பரிசோதனை செய்தபோது அவர் மது அருந்தியிருப்பதாக தெரிந்தது என்றால் சரி. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டி செல்லும் போது தடுமாறி கீழே விழுந்தால் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.04.10 14:41:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.